செ.வெ.எண்:266 நாள்:23.04.2018

# பத்திரிக்கை செய்தி

## அகில இந்தி தொழிற் பழகுநர் தேர்வுக்கு தனித்தேர்வர்களாக ஐடிஐ படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

அகில இந்திய தொழிற் பழகுநர் தேர்வுக்கு ஐடிஐ படித்தவர்கள் தனித்தேர்வர்களாக விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி வெளியிட்ட செய்திக்குறிப்பு மத்திய அரசு வழங்கும் தேசிய தொழில் பழகுநர் சான்றிதழ் (NAC) பெறும் பொருட்டு, அரசு, தனியார் தொழில் பயிற்சி நிலையங்களில் குறிப்பிட்ட தொழில் பிரிவில் பயின்று தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) பெற்றவர்கள், இதே தொழில் பிரிவில் தனிநபராக அகில இந்திய தொழிற் பழகுநர் தொழில் தேர்வில் கலந்து கொள்ள விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயின்று தேர்ச்சி பெற்று தேசிய தொழிற் சான்றிதழ் பெற்றவர்கள், தொழில் பழகுநர் பயிற்சியை தொழில் சாலைகளில் முடிக்காதவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் இந்த தேர்வுக்கான செய்முறை தேர்வு மே 16,17,18, ஆம் தேதிகளில் நடைபெறுகிறது. பொறியியல் படம் வரைதல் தேர்வு 15, ஆம் தேதியும், ஆன்-லைனில் எழுத்துத்தேர்வு மே 9,10,11 ஆம் தேதிகளிலும் நடைபெறுகிறது. தேர்வுக்கான விண்ணப்பங்கள் திருநெல்வேலி பேட்டை ஐடிஐ, அரசினர் தொடர் அறிவுரை மையம், பேட்டை, கடையநல்லூர், வீரகேரளம்புதூர், அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசியல் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் வழங்கப்படுகிறது. எனவே ஐ.டி.ஐ முடித்து தொழிற் பயிற்சி பெறாத மாணவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி**